விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 2 ஷபா 23 இதழ் 123

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-6-82


## இஸ்ரேலிய பிரதமர் பெகின் திடீர் அமெரிக்க விஜயம்

டெல்அவிவ், ஜூன் 15

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெனச்சம்பெகின் அமெரிக்காவுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார்

லெபனனில் சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டத்திற்கு அமெரிக்காவின் ஆதரவைப் பெறும் பொருட்டே அங்கு விஜயம் செய்துள்ளதாகக் கூறப்பட்டது. [வெ]

### கருத்தரங்கு

(புத்தூர்)

கோப்பாய் கல்வி வள நிலையம் யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறையுடன் இணைந்து நடத்தும்க.பொ.த. [உயர்தர]மாணவர்களுக்கான பொருளியற் கருத்தரங்கு யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில இன்றும் நாளையும் நடைபெறும், இக்கருத்தரங்கில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, அச்சுவேலி ம. வித்தியாலயம், இடைக்காடு ம. வித்தியாலயம், அச்சுவேலி புனிததிரேசா மகளிர் வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ஆகிய கல்லூரிகள் கலந்து கொள்கின்றன.

# "ஆட்சியாளரின் அக்கிரமத்தை ஒரு நாள் வென்றெடுப்போம்!

## தமிழனை தமிழன் கொல்வது விடுதலையை பின்தள்ளுகிறது"

### சிவகுமாரன் நினைவுதினத்தில் 'அமிர்'

(நமது நிருபர் - க. சிவதாசன்)

''தமிழனை தமிழனே கொல்லும் துன்பியல் நாடகம், தமிழினத்தின் விடுதலையை பின் தள்ளுகிறது, இன்பம், செல்வரத்தினம் இருவரையும் பொலிசார் கொலைசெய்த அதே பாணியில் இறைவனும் உமையும் வயல்வெளியில் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இக் கோழைத்தனமான ஈனச்செயல்புரிந்தவர் தமிழர் எனின் தமிழ்ஈழத்தில் எதிர்காலத்தில் தமிழரே மிஞ்சமுடியாது. இக்கொலையை செய்து கொண்டு- செய்பவர்கள்; இதற்குப் பொறுப்பு தமிழர் விடுதலைக்கூட்டணி என்று ''குசு குசு'' பிரசாரம் செய்கின்றனர். கெட்டிக்காரர் புளுகு எட்டுநாட்களுக்கே. உண்மைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தந்தை செல்வாவின் வழியில் இனத்தின் ஈடேற்றத்திற்காக 30 ஆண்டுகள் அர்ப்பணித்துக்கொண்ட நாம் அவ்வாறு ஈனத்தனமான கோழைச்செயலை புரிவோம் என்று நினைத்தால் அவர்கள் எமது அரசியல் பற்றி அறியாதவர்கள் என்றே நாம் கருதுகின்றோம். இது ஒருபுறமிருக்க; மறுபுறத்தில் தமிழ் இளைஞர்களை அரசு கைதுசெய்து துன்புறுத்துகிறது, இவ்வாட்சியின் அக்கிரமத்தை என்றோ ஒரு நாள் வென்றெடுப்போம்''

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று இரவு உரும்பராயில் திரு. எஸ். தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சிதைவுண்ட சிவகுமாரன் சிலையின் காலடியில் மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்திய பின்னர் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றினர். தொடர்ந்துஉரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டதாவது:- ''தம்பி சிவகுமாரனிடம் காணப்பட்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற குணதிசயங்களை இன்றைய

(8-ம் பக்கம் பார்க்க)

### கம்பர்மலை கொலைவழக்கு

## 2-ம்எதிரி பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்

கம்பர்மலை அறுவர் கொலை வழக்கின் எதிரிகளான 4பேரில் 2-ம்எதிரியான தில்லைநடராசா நேற்றுமுன்தினம் நிபந்தனைகளுடன் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

''எதிரி தில்லைநடராசா வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய எல்லைக்குள் பிரவேசிக்கக்கூடாது, இவ்வழக்கின் சாட்சிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடாது'' என்பதே மேற்படி பிணைமனுவை விசாரணை செய்த யாழ். மேல் நீதி

[8-ம் பக்கம் பார்க்க]

### முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.

## புதுடில்லி பயணம்

[சென்னை]

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று புதுடில்லி பயணமானார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும், இதர சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்து இந்திய ஜனாதிபதி தேர்தல் உட்பட பலவேறு விடயங்கள் தொடர்பாக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கலந்துரையாடுவாரென்று கூறப்பட்டது.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று முன்தினம் புதுடில்லி சென்று, பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை சந்தித்து கலந்துரையாடியது தெரிந்ததே. [வெ]

## இந்திய ஜனாதிபதி தேர்தல் பொதுவேட்பாளர்

புதுடில்லி, ஜூன். 15

இந்திய ஜனாதிபதிதேர்தலில் பொது வேட்பாளரொருவரை நிறுத்தும்படி பிரதமமந்திரி இந்திராகாந்திக்கு மீண்டும் கடிதமொன்றை எழுதுவதென்று எதிர்க்கட்சிகள் தீர்தீர்மானித்துள்ளன.

இது தொடர்பாக நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் திரு. ஜெகஜீவன் ராம், திரு. சரண்சிங், திரு. வாஜ்பாய், திரு. நம்பூதிரிபாத் ஆகியோர் கலந்துகொண்டனர். [வெ]

## முன்னாள் அமைச்சருக்கு சிறைத்தண்டனை

டாக்கா, ஜூன். 15

பங்களாதேஷின் முன்னாள் மந்திரி சௌத்திரி முகமத்திற்கு லஞ்சஊழல்குற்றச்சாட்டின் பேரில் விசேட இராணுவ நீதிமன்றம் 14 வருட சிறைத் தண்டனை விதித்தது. [வெ]

## பண்ணாகம் இளைஞர் ஆயுதப்படையினரால் கைது

(பண்டத்தரிப்பு)

பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்பு உடையவர என்ற சந்தேகத்தின்பேரில் நள்ளிரவுவேளையில் பண்ணாகத்தைச்சேர்ந்த ஆசிரியரான இளைஞர் ஒருவர் இராணுவ பொலிசாரினல் அவரது வீட்டில்வைத்து கைதுசெய்யப்பட்டார்.

பூநகரி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றும் பிரஸ்தாப இளைஞரான ஆ. சேயோன் பண்ணாகத்திலுள்ள அவரது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது நள்ளிரவுஒன்றரை மணியளவில் அங்கு திடீரென பிரவேசித்த ஆயுதப்படையினர் அவரை கைது செய்ததுடன் அவரது வீட்டையும் வீட்டு வளவையும் சோதனையிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மகாதேவா தாம்போதி: மேலும் ரூ. 1·1லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

மகாதேவா தாம்போதி அமைப்புவேலைகளுக்கு யாழ். மாவட்ட அபிவிருத்திசபை மேலும் பதினொருலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் 82-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு யாழ். செயலகத்தில் நேற்று மீள்பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் பதினொரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தும், மீதிவேலைகளையும் துரிதமாகமுடிப்பதற்கு மேலும் பதினொரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது (மா(

### ★ க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை:

## இந்த மாணவர்களுக்கு அனுமதி இல்லை!

(மாவிட்டபுரம்)

க. பொ. த. (உயர்தர)வகுப்பில் 80 வீதம் சமுகமளிக்கத் தவறிய மாணவர்கள் வரும் ஆகஸ்டில் நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் உத்தரவின்படி வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் வடமாநில பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த.(உயர்தர வகுப்பில் 80 வீதமான பாடசாலை நாட்களுக்கு சமுகமளிக்காத மாணவர்களை ஆகஸ்டில் நடைபெறவுள்ள க.பொ. த. (உயர்தர)பரீட்சையில்தோற்ற அனுமதிக்கக்கூடாதென்றும் இது விஷயத்தில் எவ்வித சலுகையும் காட்டாமல் இம்முறை இதனை கண்டிப்பாக அமுல் நடத்துமாறும் அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர்,

இதனையடுத்துக. பொ. ாத. (உயர்தர] வகுப்பில் மாணவர்கள்வரவு குறித்து அதிபர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

க. பொ. த. (உயர்தர) வகுப்பு மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் தனியார் கல்விநிலையங்களை நாடுவதிலேயே ஈடுபடுகிறார்கள். இதனல் அவர்களதுபாடசாலை வரவுகுறைய ஏதுவாகிறது. ஆகவே மேற்படி உத்தரவால் அநேகமாணவர்கள் பாதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் அரசவீதியில் வைத்தியர் அரசபிள்ளை நடராசா வீட்டிற்கு அருகாமையில் 2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பிற்பகல் 1-00 மணிக்குப்பின் தொடர்புகொள்ளவும். N. சண்முகலிங்கம், அரசபிள்ளை வைத்தியசாலை, 46, அரசவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (3542)

லிஸ்ரர் (HA 2 19 கிலோ வாட்ஸ் லைற் மிஷின் றெயிலருடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்; நியூரன் இலக்றிக்கல்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். அ. ரங்கசாமி, 15, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். கு. வேலுப்பிள்ளை, புளியங்கூடல், ஊர்காவற்றுறை. 3543

## தேவை

வில்வம் பழம் தேவை. மில்க் வைற்: யாழ்ப்பாணம். 3546

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

# கேள்வி அறிவித்தல்

1982-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ந் திகதி காலை 10-00 மணி வரை யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலை) அவர்களால் நல்லூர் உப அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படும் திருநெல்வேலிச் சந்தையின் தெற்குப்புற எல்லைச் சுவரும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தைக் கட்டடத்துக்கு அருகாமையில் இரண்டு மலசலகூடக் கட்டடங்களும், சந்தை வளவில் ஐந்து திறந்தவெளிக் கொட்டகைகளும் அமைப்பதற்கு பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களில் ரூபா 50,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-30 மணிக்கு பிரதிச் செயலாளர் [நிர்வாகம், சட்டம், வேலை] அவர்களின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி ரூபா 100/- வைப்புப் பணமாகவும், ரூபா 25/- கேள்விப்பத்திரப் பணமாகவும் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைத் தலைமைச் செயலகத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினை நல்லூர் உப அலுவலகத்தில் சமர்ப்பித்துக் கேள்விப்பத்திரங்களை ஜூலை 1-ந் திகதி பி. ப. 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் தேவையான விபரங்களை பிரதிச் செயலாளர் [நிர், சட்டம், வேலை] அவர்களின் காரியாலயத்திலோ அல்லது நல்லூர் உப அலுவலகத்திலோ அறிந்துகொள்ளலாம்.

**அன்ரன் அல்பிறட்**
பிரதிச் செயலாளர்
(நிர், சட்டம், வேலை).

உள்ளூராட்சித் திணைக்களம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
1982-06-10. 3547

---

வேலணை
ப. நோ. கூ. சங்கம்.
(மட்டுப்படுத்தப்பட்டது)

## கேள்வி விற்பனை

இரும்புக்கம்பிவகை – கிட்டத்தட்ட 150 அந்தர்.
சப்புப் பலகை (பாவிக்கப்பட்டது
காட்டுத்தடிகள்
பனை மரங்கள்
பனஞ்சிலாகைகள்

மேற்படி பொருட்கள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு.

மேற்படி ப. நோ. கூ. சங்கத்தில் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- செலுத்தி கேள்விப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். மேலும் பொருட்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக வேலை நேரத்தில் முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் கட்டிப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விகள் பெறுமதிக்கு குறைவாக இருப்பின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

முடிவு திகதி 24-6-82.

தங்கள்,
கூட்டுறவுச்சேவையிலுள்ள
**இ. சோமசுந்தரம்**
பதில் பொதுமுகாமையாளர்
354?

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய் வடக்கு காலஞ்சென்ற காசிப்பிள்ளை வேதவனத்தின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயமாக.

வேதவனம் கைம்பெண் சின்னப்பிள்ளை, பிராமண ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்
மனுதார்

இல. ரீ/3517.

எதிர்

1. வேதவனம் தயாநிதி, பிராமண ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
2. வேதவனம் மகள் சத்தியபாமா, மேற்படி
3. வேதவனம் சரவணபவான், மேற்படி
4. வேதவனம் மகள் கோமளேஸ்வரி, மேற்படி
5. காசிப்பிள்ளை கந்தையா, நுணாவில், சாவகச்சேரி, 2ம், 3ம், 4ம் பிரதிவாதிகள் பராயமற்றவர்கள். இவர்களின் பாதுகாவல் 5ம் பிரதிவாதி

பிரதிவாதிகள்

மேலே பெயர்குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் ஆஸ்தியை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கமுடைய வழக்கைத் தாக்கல் செய்து அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறுதித் தீர்வையை ஏன் பூரணப்படுத்தப்படலாகாதென்பதற்கு தக்க காரணமிருப்பின் இந் நீதிமன்றத்தில் 1982ம் ஆண்டு ஆவணி மாதம் 27ந் திகதி காலை 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி, காண்பிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
**தா. குலஞானம்**
பதிவாளர்
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1982ம் ஆண்டு வைகாசி மாதம் 28ந் திகதி.

வரைவு
**சி. சுரேந்திரன்**
மனுதாரின் சட்டத்தரணி
3479

---

பாடசாலை வைபவங்கள்

# எம். பி.க்களை அழைக்க

## கல்விஅமைச்சு அனுமதி தேவையில்லை!

[கரவெட்டி]

பாராளுமன்ற உறுப்பினர்களை பாடசாலை வைபவங்களுக்கு அழைப்பதில் கல்வி அமைச்சின் அனுமதிபெற வேண்டுமென்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு த இராசலிங்கம் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்த தந்தி ஒன்றைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி எம். பி, அண்மையில் கல்வி அமைச்ருக்கு அனுப்பிவைத்த தந்தியில், பாடசாலை அபிவிருத்தி வைபவங்களில் தொகுதி எம். பிக்கள் கலந்து கொள்வதில் கல்வி அமைச்சின் அனுமதி பெற வேண்டுமென்ற விதியினால் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜயமானு, உடுப்பிட்டி எம். பிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்:-

''இதுவரைகாலமும் பாடசாலைகள் தங்கள் பாராளுமன்ற உறுப்பினரை பாடசாலை வைபவங்களுக்கு வரவழைப்பதானால் கல்வி அமைச்சின் மூலமே அவ்வாறு செய்யலாம் என்ற விதி இப்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இனிமேல் பாடசாலை அதிபர்கள் தத்தம் பாராளுமன்ற உறுப்பினரை நேரடியாக அவ் வைபவங்களுக்கு அழைக்கலாம். எனினும், அதிபர்கள் அவ்வாறு அழைப்பு விடுக்கும் போது மாநிலக் கல்விப் பணிப்பாளருக்கு அவைபற்றி அறிவிக்கவேண்டும்.

''இதையும், இதுபோன்ற சில முடிவுகளையும் உள்ளடக்கும் ஒரு சுற்று நிருபம் அமைச்சினால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.''– என்று தெரிவித்துள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் மாநிலக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## தாம்போதியில் சிரமதான வேலை

(சாவகச்சேரி)

பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவில் சுமார் 50 தொண்டர்கள், சங்கப் பொது முகாமையாளர் திரு. தேவராசா, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. இராசநாயகம் ஆகியோர் தலைமையில் தாம்போதியில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

சிரமதான இணைப்பதிகாரி திரு. சதா. ராமகிருஷ்ணன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. நாகேஸ்வரன் ஆகியோர் சமுகமாயிருந்தனர்.

சங்கத்தின் புதிய லொறியைச் சிரமதான வேலைக்குக் கொண்டுவந்த சங்கத் தலைவரை நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. ராமக்கிருஷ்ணன் பாராட்டினார். (க)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், அரசடி வீதி, இல 96, காலஞ்சென்றகார்த்திகேசு மருதகுலசிங்கம் கைம்பெண் செல்லம்மாவின் மரண சாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, இல. 66, குலசிங்கம் தனகுலராயன்
மனுதார்

மரணச் சொத்து
நியாயாதிக்கம் இல. 3663

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982ம் ஆண்டு ஜூலை மாதம் 09ந் தேதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு மே மாதம் 25 ம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
**தா. குலஞானம்**
பதிவாளர்
3532

## நீதிமன்றக் கட்டளை விற்பனவு

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
நம்பிக்கைச் சொத்து வழக்கு இல: 4599

இணுவில் விஸ்வேஸ்வரசாமி விசாலாட்சிஅம்பாள் கோவிலின் தர்ம கர்த்தாக்களான 1. சபாபதிப்பிள்ளை அருநந்தி சிவரத்தினம் 2. சபாபதிப்பிள்ளை இராமநாதன் இருவரும் இணுவில்
மனுதார்கள்

மேற்படி வழக்கில் நீதிமன்றம் எனக்களித்த அதிகாரத்தின்படி கீழ்க்காணும் ஆதனடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1982ம் வருடம் யூலை மாதம் 13ந்திகதி (13-07-1982) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் இரண்டு லட்சத்துக்கு குறையாமல் என்னால் விற்கப்படும்.

**(யாழ். காங்கேசன்துறை றேட்டில் இணுவில் ஆஸ்பத்திரிக்கு வடக்கெல்லையிலுள் ஆதனமும் கட்டிடங்களும்)**

குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை ''கட்டுப்பலானையும் நிம்பத்தையும்'' நில. பர. 2 இது 30-5-81ல் உத்தரவு பெற்ற உலாந்தா ரி. அருமைநாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1629ம் இலக்கப்படத்தில் 1ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் கடைக்கட்டிடங்களும்கிணறும்தென்னைகளும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் குறித்த படத்தில் 2ம் துண்டு மேற்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை றேட்டு தெற்கு மக்கிளோய்ட் ஆஸ்பத்திரி இதடங்கலும் அதைச்சேர்ந்தவைகளும்

குறிப்பு:- கொள்வனவுகாரராக வெளிப்படுத்தப்பட்டவர் அதேயிடத்தில் கொள்விலைத் தொகையில் நாலிலொரு பகுதியையும் விற்பனவுச் செலவுகளையும் ரொக்கமாக உடன் செலுத்தவேண்டும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
விற்பனை ஆணையாளர்

643, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
3548


**Course Title**

C. E I. (London)
Electrical and Electronic Engineering
CITY and GUILDS (London)
Power – Electronics – Telecommunication
DRAUGHTMAN SHIP
ELECTRO TECHNICIAN
(Theory and Practical Training)
4 Months Course.
Commencing: 19-6-1982

**BOND INSTITUTES**
Hospital Road, Jaffna. Phone: 8258

விற்பனையாகின்றன
இறக்குமதிசெய்யப்பட்ட அழகிய
**தேக்கம் ஒட்டுப்பலகைக் கதவுகள்**
2' 9'' × 6' 9'' × 1 1/4''
3' 6'' × 6' 9'' × 1 1/4''
இதனைவிட குறைந்த அகல, உயரங்களுக்கு மாற்றியும் வழங்குவோம்

**இப்ராகிம் ஜபார்ஜி**
218, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். போன்: 409.

# போக்லண்டில் ஆர்ஜென்டீனா படைகள் சரணடைந்தன!

## தலைநகர் 'போர்ட்ஸ்ரான்லியில்' வெள்ளைக் கொடிகள்!

போர்ட்ஸ்ரான்லி, ஜூன் 15
போக்லண்ட் தலைநகரான போர்ட்ஸ்ரான்லியில் நிலைகொண்டிருந்த ஆர்ஜென்டீனா படைகள் தலைநகரைச் சுற்றி வளைத்துக் கொண்ட பிரிட்டிஷ் படைகளின் பலத்த தாக்குதலைத் தொடர்ந்து இன்று சரணடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

தலைநகரான போர்ட்ஸ்ரான்லியில் சுமார் 7000 ஆர்ஜென்டீனா படைகள் எதிர்த்தாக்குதல் நடத்துவதற்காக தயார் நிலையிலிருந்தன. இருதினங்களுக்குமுன் தலைநகர்மீது தாக்குதலை ஆரம்பித்த பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்து முன்னேறின.

கடந்த சில தினங்களாக போர்ட்ஸ்ரான்லியைக் கைப்பற்றுவதில் பிரிட்டிஷ் – ஆர்ஜென்டீனா துருப்புக்களிடையே நடந்தகடும் மோதலையடுத்து ஆர்ஜென்டீனா தான் சரணடைவதைத் தெரிவிக்கும்வகையில் போர்ட்ஸ்ரான்லிப் பிரதேசத்தில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டன.

சன்காலோஸ் என்ற பிரதேசத்தின்மூலமாக போக்லண்டில் இறங்கிய பிரிட்டிஷ் துருப்புக்கள் படிப்படியாக முன்னேறி இலகுவாக போர்ட்ஸ்ரான்லியைக் கைப்பற்றும் வகையில் பல கேந்திர நிலைகளை ஆர்ஜென்டீனா துருப்புக்களிடமிருந்தும் மீட்டிருந்தன.

### பிரி. துருப்புக்கள் முன்னேற்றம்

இறுதியாக தலைநகரான போர்ட்ஸ்ரான்லிக்கு மிக அண்மையில் சென்ற பிரிட்டிஷ் துருப்புக்கள் அந்நகரின்கிழக்கு மேற்குப் பகுதிகளைச் சுற்றிவளைத்ததையடுத்தே ஆர்ஜென்டீனா சரணடையமுன்வந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது

### பிரி. பிரதமர் தெரிவித்தார்

போர்ட்ஸ்ரான்லியிலுள்ள ஆர்ஜென்டீனா துருப்புக்கள சரணடையவிருப்பதை நேற்று முன்தினம் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அப்போது அங்கிருந்த பிரதிநிதிகள் பலத்த சரகோஷத்துடன் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரின் உரைக்கு மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர்.

### ஆர்ஜன்டீன படைகள் சரணடைந்தனர்

நேற்று அதிகாலை கிடைத்த பி. பி ஸியின் செய்திப்படி ஆர்ஜென்டீனா துருப்புக்கள் முழுமையாகச் சரணடைந்துவிட்டனவென்றும் இருதரப்புக் கமாண்டர்களும் தமது துருப்புக்களின் நிலைகுறித்துப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றனரென்றும் தெரியவந்தது.

கடந்த மார்ச் மாத நடுப்பகுதியில் பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்த போக்லண்ட், தென்ஜோர்ஜியா தீவுகளைக் கைப்பற்றும்விதத்தில் ஆர்ஜென்டீனா தனது படைகளை அனுப்பி முதலில் தென் ஜோர்ஜியாவையும் பின்னர் ஏப்ரலில் போக்லண்ட் தீவுகளையும் கைப்பற்றியது. ஆர்ஜென்டீனா போக்லண்ட்தீவுகளைக் கைப்பற்றியபோது அங்கு 80 பிரிட்டிஷ் கடற்படைவீரர்கள் மட்டுமே இருந்தனர்.

### ஆர்ஜென்டீன படைகள்

போக்லண்ட் தீவுகளைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த ஆர்ஜென்டீனா அங்கு தனது படைபலத்தை அதிகரிக்கும்வகையில் ஆயிரக்கணக்கில் துருப்புக்களை விமானம் மூலமும் கப்பல்கள்மூலமும் இறக்கியவண்ணமிருந்தது.

ஆர்ஜென்டீனா போக்லண்டைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து சமாதானப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இருதரப்பினரும் சுமுகமுடிவுகாணத் தவறியதையடுத்து பிரிட்டிஷ்படைகள் போக்லண்ட் நோக்கி அனுப்பப்பட்டன.

போக்லண்ட் சென்ற பிரிட்டிஷ் படைகள் முதலில் தென் ஜோர்ஜியாவை ஏப்ரல் கடைசிப்பகுதியில் தமது கட்டுப்பாட்டின்கீழ் மீண்டும் கொண்டுவந்ததுடன் அங்கிருந்த 200 ஆர்ஜென்டீன துருப்புக்களையும் சிறைப்பிடித்தன.

கடுமையான யுத்தத்துக்கு மத்தியில் கடந்த மாத இறுதிப்பகுதியில் சன்காலோஸ் மூலமாக போக்லண்டில் தரையிறங்கிய பிரி. துருப்புக்கள் அங்கிருந்து படிப்படியாக முன்னேறி இறுதியாக மவுண்ட் கென்ற் மலைப்பகுதியை ஆக்கிரமித்து அங்கிருந்துகொண்டே முழுமையாக இயங்க ஆரம்பித்தது.

தென் அத்திலாந்திக்சருகில் பிரிட்டிஷ் – ஆர்ஜென்டீனா படைகளுக்கிடையே மூண்ட மோதலில் ஆர்ஜென்டீனாவின் இரண்டாவது பெரிய யுத்தக்கப்பலான ஜெனரல் பெல்கிரானோ உட்பட 50க்கு மேற்பட்ட போர்விமானங்கள் பிரிட்டிஷ் படைகளால் அழிக்கப்பட்டன. அத்துடன் நூற்றுக்கணக்கான உயிர்ச்சேதமும் ஏற்பட்டது.

### பலத்த சேதம்

பிரிட்டிஷ் போக்லண்ட் தீவு

(6-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் இந்திராவை கருணாநிதி சந்தித்தார்

## இலங்கை இளைஞர்களை கையளிக்கவேண்டாம் என்று கோரிக்கை

புதுடில்லி, ஜூன் 15
புதுடில்லியில் நேற்று பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியை தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும், தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதி சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பில் திரு. கருணாநிதி பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம், தமிழகத்தில் கைதாகியுள்ள தீவிரவாத தமிழ் இளைஞர்களை இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கவேண்டாமெனக் கோரிக்கைவிடுத்தார்.

தமிழகத்தில் கைதான தீவிரவாத தமிழ் இளைஞர்களை இலங்கைக்கு கையளிக்கும்பட்சத்தில் அவர்கள் மீது நியாயமான நீதிவிசாரணை அங்கு நடத்தப்படமாட்டாதெனவும் அநியாயமாக அவர்கள் குற்றவாளிகளாக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

இலங்கைத் தீவிரவாத இளைஞர்களைத் தமிழகப்பொலிசார் கைதுசெய்தமைக்காக அவர்களுக்கு இலங்கை அரசு வழங்கவிருப்பதாகக் கூறியிருக்கும் சன்மானத்தொகையையும் ஏற்றுக்கொள்ளவேண்டாமென திரு. கருணாநிதி பிரதமர் இந்திராவிடம் கேட்டுக்கொண்டார்.

இரு தலைவர்களுக்குமிடையே புதுடில்லியில் நடைபெற்ற உரையாடல் சுமார் 45 நிமிடங்கள்வரை நீடித்தது [கி]

## லெபனனில் இஸ்ரேலின் நிலை:

# அமெரிக்காவும் ரஷ்யாவும் பலத்த கண்டனம்!

பெய்ரூட், ஜூன் 16
தென் லெபனனின் தலை நகரான பெய்ரூட்டை ஆக்கிரமித்திருக்கும் இஸ்ரேலின் போக்குக் குறித்து சோவியத் ரஷ்யா தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

சோவியத் ரஷ்யா தெரிவித்தன்ன கண்டனத்தில், இஸ்ரேலியரின் ஊடுருவல் மேற்கு ஆசியாவில் பதட்ட நிலையை உருவாக்குவதாக இருக்கின்றதெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இவ் ஆக்கிரமிப்பைக் கண்டித்த அமெரிக்கா, காம்ப்டேவிட் சமாதான ஒப்பந்தத்தை ஒத்திவைத்திருப்பதாக அறிவித்துள்ளது. இவ் அறிவிப்பை, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜெனரல் அலெக்சாண்டர் ஹெய்க் வெளியிட்டார்.

கூட்டுச்சேரா நாடுகளின் தலைவரும் கியூபா ஜனாதிபதியுமான திரு. பிடல் காஸ்ட்ரோ இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், இஸ்ரேல் உடனடியாக அது ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்தும் வெளியேற வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியப் படைகளுக்கு தென் லெபனனிலுள்ள வலதுசாரிக் கிறிஸ்தவ இயக்கமும் ஆதரவளித்து வருகிறதெனவும், அதன் உதவியுடனேயே பெய்ரூட்டிலுள்ள மலையொன்றினூடாக இஸ்ரேல் ஊடுருவலை மேற்கொண்டதெனவும் பாலஸ்தீன கெரில்லாக்களை ஆயிரக கணக்கில் கைதுசெய்ததெனவும் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரியொருவர் கருத்து வெளியிடுகையில், பயங்கரவாத நிலையை முற்றாக ஒழித்துக்கட்டவே தாம் தற்போது போரிடுவதாகவும்பாலஸ்தீனர்களால் தமது குடிமக்களுக்கும் நாட்டுக்கும் பலத்த அபாயம் ஏற்பட்டு வந்ததென்றும் தெரிவித்தார். [கி]

## யாருடையது?

### சேமிப்பு கணக்குப் புத்தகம்

கந்தர்மடம் குமாரசாமி வீதியில் கே. தியாகலிங்கம் என்பவரால் கண்டெக்கப்பட்ட சேமிப்புவங்கி கணக்குப் புத்தகம் ஒன்று ஈழநாட்டுக் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது,


த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட் ஆதரவில்

வல்வை பாரத் கலாமன்றத்தின் 10–வது ஆண்டு நிறைவு விழா

வெளியீடு

காலத்தை வென்றவன்
(சரித்திர நாடகம்)

இடம்: நெடியகாடு, வல்வெட்டித்துறை
காலம்: 19-6-1982 சனிக்கிழமை இரவு 7-00 மணி

கதை வசனம்: கே. எஸ். துரை B. A.
இயக்குனர்: எஸ். ரி. அருள்

பிரவேசம் இலவசம்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்
42 வருடகால சேவையில்
TFC

### மணிவாக்கு

தன்னம்பிக்கை அறிவின் வேலைக்காரனாக இருத்தல் வேண்டும். அறியாமையை அணிகலனாயுடையமக்கள் உண்மையான விடயத்தை இலகுவாக நம்புவதில்லை

— இங்கர்சால்

# நமது நோக்கு

## மக்கள் ஆட்சியும் கிராமாபிவிருத்தியும்

“நீங்கள் இவ்வழி பின்பற்றுதல் நலம்” என்று அரசியல தலைவர்கள் எடுத்துச் சொன்ன காலம் எங்கே போய்விட்டது!

அரசியல் வாதிகளுக்கு ‘எம். பி.’ பைத்தியம் பிடித்து, மற்றவர்களும் அவர்களுக்குப் போட்டியாகப் புறடபடும் சமயம் வந்தவுடன், அரசியல் தலைவர் மக்களுக்கு வழிகாட்டுவதை விட்டு மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்பதே முக்கிய தொழிலாயிற்று. ‘எம். பி.’ யாக வரமுடியாவிட்டால் நாட்டுக்கு பணிபுரிய முடியாது போலும்.

சுதந்திர இலங்கையில் ஆட்சிக்குவந்த அரசெதுவும், தாங்கள் எவ்வாறு அந்த ஆசனத்தில் என்றும் குந்துவிடலாமென்றும் போட்டிக் கட்சியை எவ்வாறு தடுத்துவைக்கலாமென்றும் கடினமாகச் சிந்தித்து அதற்குரிய சூழ்ச்சிகளைக் கையாண்டனர். அதிலே காலம் போக்கியது மிக நீண்டகாலம்.

“தலைவர்கள் இட்டது சட்டம்” என்பது ஜனநாயகமல்ல; அந்த உண்மையை இந்நாட்டு வாக்காளர்கள் காலத்துக்குக்காலம் அரசை மாற்றியமைத்ததில் தெளிவுற உணர்த்தியிருக்கின்றனர். ஏமாளியாக மக்கள் இருந்தகாலம் மலையேறுகின்றது.

அதேசமயம் அரசியல் வாதிகள் மக்களிடப்போய் “பெரியோர்களே! இந்நாட்டு மன்னரே! உங்கள் வாக்குகளை எங்களுக்கே போடுங்கள்; உங்கள் கவலையைத் தீர்க்கும் மருந்து எங்கள் கட்சியிடம் இருக்கிறது” என்று கெஞ்சும நிலையும் மக்கள் ஆட்சிக்கு முரண்பட்டது. கட்சியா, வேட்பாளரா என்ற விரக்தியும் புதிய முறையில் உறைந்திருக்கிறது.

கடந்த ஆட்சியில் நிலவிய தான்தோன்றித்தனம் அதன் வீழ்ச்சியில் என்றும் நினைவுக்குரிய விடயமாயிற்று. இருந்தும் அக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருமென்ற அச்சம் இன்றைய ஐ. தே. கட்சி ஆட்சியை ஆட்டி அலைக்கின்றது. அதனை எவ்வாறு நீக்குவதென்ற திண்டாட்டமம இன்றைய பிரச்னை.

ஆரம்பத்திலே எடுக்கப்பட்ட துரிதமான நடவடிக்கைகளும் – குடியுரிமை பறித்தல் முதலியன – இன்று பாராளுமன்றத்தில் இடம்பெறும் அவசியமற்ற ஆராய்ச்சிகளும் இந்த அச்சத்தையே அம்பலப்படுத்துகின்றன. அச்சம் ஒருபுறம்; பழிக்குப்பழி வாங்கும் மிகக் கொடிய சுபாவம் இன்னொரு புறம்; மனித வாழ்க்கையைக் கெடுத்துவிடும் இவ்விரு தீயகுணங்களும் எங்கள் நாட்டின் அரசியலில் வேரூன்றி இருக்கின்றது தெளிவு. இவை அகன்றாலொழிய நாடு முன்னேற்றம்காண்பதரிது.

இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களே! இந்த நாட்டை ஆளும் அதிகாரம். இன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கா அல்லது திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கா? கட்சி ஆட்சியும் மக்கள் அரசியல் உரிமையும் இந்தக் கேள்விக்குள் அடங்க வேண்டியதென்பது இக்காலச் சிந்தனை.

இதுநிலைத்திருக்குமென்று நாம் கருதவில்லை, கவலைப் படவுமில்லை. இருப்பினும் ஒரு நாட்டின் எதிர்காலம், இவ்வித அரசியல் போட்டிக்கு அடகு வைக்கப்படின் அதன் விளைவு என்ன? இன்று மக்கள் அனுபவிக்கும் இன்னல்களிலிருந்து புரியமுடியாதா?

ஒரு நாட்டின் உயிர்நிலை அதன் கிராமம் பிரதேசத்திலேயே தங்கியிருக்கிறதென்பதை இன்று ஒருவரும் ஆட்சேபிக்கமாட்டார். சமயவிருத்தி, கலாசார விருத்தி, கல்விவிருத்தி, சுகாதாரம், பொருளாதாரம் கிராமத்திலேயே வளர்ச்சி காணவேண்டும். எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றோம்.

இதனை ஒப்புக்கொண்ட ஐ. தே. கட்சி ஊர்கள் தோறும் கிராம முன்னேற்றச்சங்கங்கள் நிறுவி பண உதவி புரிந்த இந்த இன்றியமையாத திட்டங்களில் ஊக்கம் காட்டியது; பல குறைகள் நிலவியபோதும் கிராம வாழ்க்கையில் ஒரு விதஎழுச்சி ஆரம்பமானது.

அடுதது வந்த சிறிலங்கா இதனை மாற்றியமைப்பதில் தனது பெருமை தங்கியிருக்கிறதென்று நினைத்தது; தான்தோன்றித்தனம் எத்தனை ‘தடல்புடல்களை’ப் புரிந்தது! அன்று சிறிலங்கா ஆட்சியில் ‘அசைக்க முடியாத அதிகாரத்தை’ செலவு செய்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று அரசியலில் தான் ஒருபோதும் தலையிடுவதில்லை என்று பகிரங்கமாக அறுதியிடுவதானால் குடைநிழல் இருந்து குஞ்சரமூர்ந்தவர் பாடு எப்படி இருக்குமென்பதை மற்றவர்களும் உணர வேண்டும்.

நல்ல நோக்கமானாலும் கிராம முன்னேற்றச்சங்கங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், நன்றாகத் தொழிற்பட்ட இந்தநிறுவனங்கள ஸ்ரீலங்க ஆட்சியில் நங்கூரம் போட்ட நிலை அடைந்தன. வேலையில்லா வாலிபர்கள் விளையாடவும் வாசிக்கவும் ஜனசமூக நிலையங்கள்முதன்மை பெற்றன. இவை கிராம முன்னேற்றச்சங்கங்களின் பரந்தசேவையை கிராமப் புறங்களில் பாதித்தன. இந்நிலையங்களின் சாதனைகளை மதிப்பிட்டால் பல ஒழுங்கீனங்கள் வெளிப்படும்!

மீண்டும் ஐ. தே. கட்சி ஆட்சியில் கிராம அபிவிருத்தி இயக்கத்தினை மீள அமைத்தல் என்ற திட்டத்தில் கிராமமக்களின் பொருளாதார, சன்மார்க்க, சமூக அபிவிருத்தியை மேம்படுத்தல் என்பதே நோக்கம் எனக் கூறிக்கொள்கிறது. ஆனால் கிராமமக்கள் இளைஞர்களும், யுவதிகளும் வெளிநாட்டுக்கு அள்ளுப் படுகின்றன. குழந்தைகளும் விற்பனையாகின்றன.

பழைய கிராமச் சங்கங்கள் மறைந்தனும் புதிய கிராமாபிவிருத்தி சங்கம் ஒரு குழந்தைப்பருவத்தில் தவண்டு கொள்ளமுடியாதிருப்பதும்இதற்கு மேலான மாவட்ட அபிவிருத்திச் சங்கம் “மீனு, இறைச்சியா” என்று தெளிவுபடாது பரிசோதனை நிலையில் பரிதவிப்பதும் மக்கள் ஆட்சி மாற்றங்களின் திருவிளையாடல்களென்று அறிக.

இவற்றை அறிந்துஉயிர் கொடுத்து இயங்கச்செய்யும் வாய்ப்பு எதிர்காலத்தில் உண்டா என்பது கேள்வி குறியே!

# லெபனானில் இஸ்ரேலியரிடம் பிடிபட்டோர் தமிழ்இளைஞரா?

லெபனான் தலைநகரின் விமான நிலையத்தைக் கைப்பற்றும் அளவுக்கு முன்னேறிச் சென்றுள்ள இஸரேலிய அதிரடிப் படைகள் சிறைப் பிடித்து வைத்துள்ளவர்களில் இலங்கையர்களும் இருக்கிறார்கள் என்று இப்பொழுது தகவல் கிடைத்துள்ளத.

இதுபற்றி கொழும்பு ஆங்கிலப்பத்திரிகையொன்று வெளியிட்டுள்ள செய்தியில் இலங்கையர்கள் இஸ்ரேலியரிடம் பிடிபட்ட செய்தி நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் முதலில் வெளிவந்திருப்பதாகவும் பிடிபட்டவர்களின் விபரமோ எண்ணிக்கையோ தெரியவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளது.

கலவர நிலையிலுள்ள மத்திய கிழக்கு நாடுகளில் “வடபகுதி பயங்கரவாதிகள்” பயிற்சி பெற்றுவருவதாக இங்கு ஒரு கருத்து நிலவி வந்ததாகவும் இஸ்ரேலியரிடம் பிடிபட்டவர்கள் இந்த இளைஞர்களாக இருக்கலாம்என்றும் கொழும்பு டெலிநியூஸ்’ பத்திரிகை கூறுகின்றது. இலங்கையர்கள் வெளிநாடுகளில் சண்டையிடும் படைகளில் சேர்ந்து ராணுவத்திறமையும் ஆயுதங்களும் பெற்றிருப்பார்கள் என்ற கருத்தை நியுயோர்க் செய்தி பலப்படுத்துவதாய் இருக்கிறது என்று அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (பி)

# நமது வானொலியில் அடிக்கடி நடைபெறும் இசைபரிசோதனை

எமது வானொலியில் அடிக்கடி நடைபெறும் ஒரு முக்கிய [illegible] பரி[illegible] ட்டது. தமிழ்ச்சேவைத் தலைவர்கள் மாறி மாறி அதிகாரத்திற்கு வரும்போதெல்லாம் முதலில் செய்வது இசைத் துறை மறு பரிசோதனை அது மறு பரிசோதனை, தரப்படுத்தல் என்ற பெயர்களில் அடிக்கடி நடாத்தப்படும. கடந்த 10 வருடத்தில் குறைந்தது 6 தடவையாவது நடாத்தியிருப்பார்கள் இதில் பி பிரிவுக் கலைஞர்கள்தான் அகப்படுவார்கள்

1979ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சிங்கள, தமிழ்இசைக் கலைஞர்கள் அனைவரை[illegible]டுத்துவதற்கு இந்தியாவிலிருந்து இரண்டு இசைத்துறை விற்பன்னர்களை அழைத்தது. ஒருவர் தமிழ்க் கலைஞர்கள் சகல தரத்தின[illegible] மற்றவர் இதேபோல் சிங்களக் கலைஞர்களையும் தரப்படுத்தினர்கள். அப்போது பதவியிலிருந்தும் இசைப் பரிசோதனையில் ஈடுபட முடியாதுபோன தமிழ் சேவைத் தலைவர் தற்போது மீண்டும் மறுபரிசோதனை. நிகழ்த்தினார்கள். பாவம் கலைஞர்கள் இரண்டு வருடத்திற்கு முன்புதான் மறு பரிசோதனையில் கலந்கொண்டு இன்றும் [illegible] ள்கூட [illegible] தற்குள்

மக்கள் கருத்து

மீண்டும் மறுபரிசோதனை. 1979ல் தான் தமிழ், சிங்கள சேவை இரண்டிற்கும் பொதுவாக மறுபரிசோதனை நடந்தது தற்போது தமிழ்ச்சேவை மட்டும் 1982 மார்ச் மாதமளவில் பி பிரிவுக் கலைஞர்களை மறுபரிசோதனைக்கு அழைத்தது.

இதற்கென அமைக்கப்பட்ட நடுவர் குழு கலைஞர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு துறையைப் பரிசீலிப்பவர்கள் அத்துறை பற்றிய விற்பன்னர்களாக இருப்பது எப்போதும் நன்று. அதுவும் கர்நாடக இசைத் துறையில் நடுவர்களாக இருப்போர் அத்துறையில் இசைக் கச்சேரிகள் செய்து நீண்ட அனுபவம் உடையவர்களாக, தொழில் முறைக் கலைஞர்களாக இருப்பது தேசிய ரீதியில் வானொலி இசைக்கலைஞர்களின் தரத்தை நிர்ணயிக்க உதவும். தொழில் ரீதியில் சிறந்த கலைஞர்களாக இல்லாவிடின் அத்துறையில் சிறந்த தராதரப் பத்திரங்களையாவது கொண்டிருத்தல் அவசியம்.

தொழில் ரீதியிலும் சிறந்த மேடைக் கலைஞர்களாக இருப்பது நல்லது. நிச்சயமாக ஒரு நல்ல இசைக் கலைஞர் வித்தியாசமான ராகங்களைப் பாடினாலோ, ஸ்வரம் பாடி

[5-ம் பக்கம் பார்க்க]

# கிறிஸ்தவ மெய்யியலின் இந்தியத் தன்மை

## ‘இதயத்தின் இராகங்கள்’ பற்றிய ஒரு நோக்கு

தமிழ் இலக்கிய வீணை எழுப்புகின்ற பக்தி இராகங்களின் வரிசையிலே ஒரு புதிய இராகம். அதுதான் “இதயத்தின் இராகங்கள்” இறைவனைத்தேடி ஒரு மனித இதயம் இந்தியப் பண்பாட்டின் பின்னணியில் தத்துவ ஆய்வு செய்யும் குரலோசையின் எழுத்துப் பரவலே “இதயத்தின் இராகங்கள்” இளவாலையைச் சேர்ந்த அருட்திரு ஏ. ஜே. வி. சந்திரகாந்தனின் “the God of the Indian Christian” (இந்தியக் கிறிஸ்தவனின் கடவுள்) என்றமெய்யியலாய்வு நூலின் தீந்தமிழ் இலக்கிய நதியாகப் பக்திப் பிரவாகப் கொண்டோடவைக்கிறார் தமிழகத்தின் அருட்தந்தை மரிய அல்போன்ஸ் அடிகள் “இதயத்தின் இராகங்களாக”.

சந்திரகாந்தன் அடிகளின் கருத்துச் செறிவும் மரிய அல்போன்ஸ் அடிகளின் புதுமைத் தமிழ் நடையும் இரண்டறக் கலந்து பாலோடு கலந்த தெள்ளமுதமாக படிப்பவர் மனதிலே பக்தித் தேனைப் பாய வைக்கிறது. நூலின் அமைப்பிலேயே ஒரு அழகு. “முன்னிசை– ஆதிதாளம் – இடையிசை–அருளிசை என்னிசை”. என இதயத்தின் இராகங்கள் 5 அத்தயாயங்களாக பிரிக்கப் படுகின்றன.

முன்னிசையில் “இறைவனை மனித மொழியால், கலையால், கைத்திறமையால், சிலையால் சித்திரத்தால் விளக்க முடியாது. விவரிக்க இயலாது” என்ற பேருண்மை வெளிப் படுத்தப்படுகிறது. “இயற்கையைவிட தன் இதயத்தில் இறைவன் உறைகிறான். அவனே பரமான்மா என்று உணர்ந்தான் நம்பினான் வழிபட்டான் அடக்க இயலா ஆனந்தத்தில் “இவ் ஆன்மா பரமன்” அது நீ ஆகின்றாய். யான் பரமன். “நானே அவன் என்று அக்களித்தான்” என சேவதஸ்தார, மண்டுக்கைய, சாண்டோக்கிய, ஆரணியக்க உபநிடதக் கருத்துக்களினூடாக ஒருவன் கடவுள் [illegible] தம்மை தனக்கு வெளிப்படுத்தவில்லையெனில் [illegible]த் தகுந்த முறையில் அறிய முயலாது என்று கூறப்படுகிறது.

முன்னோராம் முனிவரும் மன எழுச்சியை ஏவி விடும் மறையவன் குணநலன்களை மறைபொருளாகவே அனுபவித்தனர். என முன்னிசையில் இதயராகம் எழுப்பிய ஆசிரியர் “ஆதித்தாளத்தில்” எனக்கு முந்தையோர் பலருண்டு அவர்கள் மேற்கொண்ட நீண்ட பயணத்தை நினைவில் கொண்டு நானும் என் குறுகிய பயணத்தை தொடர்கிறேன்” என தனது இறைவன் பற்றிய ஆய்வை ஆரம்பிக்கிறார். திருமூலரையும் கம்பரையும் மாணிக்க வாசகரையும் தனது இறை

- பற்றிமாகரன் -

[5-ம் பக்கம் பார்க்க]

கடல் கொந்தளிப்பு:

# பிரிட்டிஷ் பொறியியலாளர் சுழியில் சிக்கி மரணம்!

(கொழும்பு)
பிரிட்டிஷ் பிரஜையான றிச்சர்ட் எட்வர்ட் எனும் பொறியியலாளர் பெந்தோட்டைக் கடலில் நீராடிக்கொண்டிருக்கும்போது நீரில் மூழ்கி மரணமானர்.

உல்லாசப்பயணியாக வந்த றிச்சர்ட் பெந்தோட்டைக் கடலில் நீராடிக்கொண்டிருக்கையில் மிகவும் சக்திவாய்ந்த சுழியினுள் இழுத்துச்செல்லப்பட்டபோதே நீரில் மூழ்கினர் என்றும், இவரது உடல் கைக்கவல என்ற இடத்திற்கருகில் கடலில் மிதந்துகொண்டிருக்கும்போது கண்டுபிடிக்கப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளின் போது றிச்சர்டுடன் வந்த செல்வி அன்டிறியா செப்பார்ட் சாட்சியமளித்தார்.

விசாரணை முடிவில் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தெற்கில் நிலவிவரும் சீரற்றகாலநிலையினுல் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பே திரு றிச்சர்ட்டின் மரணத்துக்குக் காரணமென்று மரண விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## நோயாளிகள் கஷ்டம்

(பண்டத்தரிப்பு)
வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி பதவி நீண்டகாலமாக நிரப்பப்படாது காலியாக இருப்பதால் இப்பகுதி நோயாளர்கள் மிகுந்த கஷ்டம் அடைந்து வருகின்றனர்.

உதவி வைத்திய அதிகாரி ஒருவரே தனித்து சகலகடமைகளையும் இங்குசெய்ய வேண்டியுள்ளது இதுபற்றி வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. (க)

## கிறிஸ்தவ மெய் ..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]
யாய்வின் முந்தையோராசக் காட்டி இந்து-கிறிஸ்தவ தத்துவ இணைப்பாக இந்திய – மேலைத்தேய மத உறவாக "இதயத்தின் இராகங்களை'. மாற்றுகிருர். "எல்லாப் பாதைகளும் உன்பாசம் சேர்ப்பவையே என்ற நம்பிக்கையில்–பாதை ஒன்றைத் தேர்ந்தெடுக்தேன்" எனக் கூறும் ஆசிரியர். கிறிஸ்தவ மெய்யியலை தன் பிரதான பாதையாக வைத்து இடையிசை–அருளிசை என்பவற்றில் கடவுளின் மூவொரு நிலை பற்றிய ஆய்வை மேற் கொண்டாலும் இந்து மதமும் மூன்று நிலையில் ஒரே கடவுளைச் சுட்டுவதை அடிக்கடி தொடர்புபடுத்தத் தவறவில்லை. இறுதியாக என்னிசையில் நான் இந்திய மண்ணிலே பிறந்தவன் நான். கிறிஸ்தவனுக இருந்தாலும் என் நரம்புகளில் ஓடுவது கங்கை யமுனை காவேரி என் சிந்தையை நிறைப்பது சத்தியம்–சிவம்–சுந்தரம். .... அறம் பொருள் இன்பம்..." என் முந்தையரின் அழகுறு கலையிலே வளமுறு காவியங்களிலே சிலையிலே சிற்பத்திலே சித்திரத்திலே பண்பட்ட பண்பாட்டிலே பக்தி நெறியிலே வேத விளக்கங்களிலே அருமறைக் காவியங்களிலே அவர்தம் வளமான வாழ்க்கை நெறியிலே ஆழ்ந்த அனுபவங்களிலே உமது அருளை அன்பின் ஆழத்தை நான் காண்கிறேன். உமது ஞானம் அங்கே சுடர் விட்டு ஒளிர்கிறது" எனக் கூறி இந்தியப் பண்பாட்டில் நின்று கிறிஸ்தவ மெய்யியலை நோக்கி கிறிஸ்தவ மெய்யியலை இந்தியமயப்படுத்து பெரும்பணியை ஆசிரியர் செய்கிருர். "யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமுமன்று அன்பும் அறனும் அருளும். இவை மூன்றும் இதுவே என் இதயத்தின் இராகம்" எனமுடிகிறது நூல்.

தத்துவ நூல் ஆனல் தமிழ் எனும் தங்கச் சிந்தையில் வார்த்த கவிதைக் கள்ளாக நூல் இயற்றப்பட்டுள்ளதால் படிப்பதற்கு சலிப்பூட்டாது. சுவையூட்டிச் சிந்தனையூட்டி சருத்துப் புரட்சி செய்யும் கதைபோன்று நூல் வளர்கிறது கண்ணைக்கவரும் ஐந்து "மாடர்ன்ஆட்" சித்தரங்கள் சித்திரத்தால் இதயஇராகத்தை விளக்குகின்றன. எளிய நடையும் புதிய கருத்தும் புதுமைச் சுத்திரங்களும் "இதயத்தின் இராகங்களுக்கு' இலக்கியத்தரம் வழங்கிதமிழ் இலக்கிய பக்தியின் ஒரு கூருக அதனை மாற்றி விடுகின்றன. அதே வேளை படிப்பவர் மனதிலே மனித வாழ்க்கை இறைத் தன்மையோடு இணைக்கப்பட்ட இன்பமான பயணம்" எனவே அச்சமில்லை அச்சமில்லை ஆண்டவன் துணை என்றுமுண்டு அச்சமில்லை என வாழ்வில் வீறுநடை இடப் புதுத்தென் பூட்டுகிறது. சுபாஷ் சந்திர காந்தன் உங்களின் இந்திய–கிறிஸ்தவ உறவு முயற்சி இந்துமத– கிறிஸ்தவ ஏணிப்படி முயற்சி வெற்றிப்படைப்பாக 'இதயராகமாக' மாறிவிட்டது யாழ் வளாக கிறிஸ்தவ கலாச்சாரபீட பேராசியராக இயங்கும் நீங்கள் மேலும் இத்துறையில் புதுமைப் படைப்புக்களை படைத்திட அன்னைத் தமிழ் தங்கள் உதவிலைய வேண்டி நிற்கிருள்.

## வாள்வெட்டு வழக்கு

# காயமடைந்தவருக்கு 500 ரூபா நஷ்ட ஈடு!

[சாவகச்சேரி]
தாவளை இயற்றுலை வாள் வெட்டு வழக்கில் எதிரிகள் காயமடைந்தவருக்கு ரூபா 500 நஷ்டஈடு செலுத்தினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 77 மே 7ல் தாவளை இயற்றுலையைச் சேர்ந்த சி. வேலுப்பிள்ளை என்பவரை அவ்வூரைச் சேர்ந்த சின்னையா, இராமு, சின்னையா வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம் தங்கராசா, சின்னையா முருகர், வேலுப்பிள்ளை சின்னத்துரை என்பவர்கள் வாளால் வெட்டிப்படுகாயப்படுத்தியிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இருபகுதியாரும் இணக்கத்திற்குச் சம்மதம்தெரிவித்தனர்.

நீதிபதி 500 ரூபா நட்டஈடாக கொடுக்கும்படி பணித்ததும் அவர்கள் உடனே 500 ரூபா கொடுத்தனர். [க]

## வருடாந்த திரு விழா

(கரவெட்டி)
கரவெட்டி புனித. அந்தோனியார் ஆலயவருடாந்த நவநாட் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற திருப்பலிப்பூசை, ஆராதனையுடன் நிறைவு பெற்றது. (க)

## அறவழிப் போராட்டக் குழுவின் சுகாதார சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய்த் தொகுதியிலுள்ள வேம்பிராய் கிராமத்தில் அறவழி போராட்டக்குழு தனது முதலாவது சுகாதார சிகிச்சை நிலையத்தினை ஆரம்பித்து நடத்தியது

இந்த நிகழ்ச்சியின் போது கோப்பாய் தொகுதி மா.அ. சபை உறுப்பினர்கள் திருவாளர்கள். க.சின்னத்துரை, ந. இராசேந்திரன் ஆகியோரும். வேறு பல பிரமுகர்களும் பங்கு கொண்டு அறவழிப்போராட்டக்குழுவின் புதிய முயற்சிக்கு ஊக்கமளித்தனர்.

முதல் நாளன்று வேம்பிராய் கிராமத்தில் வசிக்கின்ற 25க்கு மேலான குடும்பங்களுக்கு சுகாதார ஆலோசனை வழங்கியதுடன். அவர்களுக்கான மருந்து வகைகளையும் இலவசமாக வழங்கினர்.

இதுபோன்ற சுகாதார சிகிச்சை நிலையத்தினை ஒவ்வொரு தொகுதியிலும் ஆரம்பிக்கப் போவதாக குழுவினர் தெரிவித்துள்ளனர்:

## நமது வானெலியில்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)
ஞலோ, அல்லது வித்தியாசமான தாளங்களைப் போட்டாலோ இவர்களால் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். முதலில் நடுவர்களைப் பரிசோதிக்கவேண்டும் இந்த லஷணத்தில் சிங்கள அதிகாரி ஒருவரையும் அவதானிப்பாளராக இருத்தி விடுவார்கள். அவருக்குக் கர்நாடக இசை சுத்த சூனியமாக இருக்கும். தமிழ்ச்சேவை அதிகாரிகள் கூட்டுத்தாபனத்தினுள் சிங்கள அதிகாரிகளிடம் தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட இப்படி ஓர் ஏற்பாடு. சிங்கள சேவையில் இசைப் பரிசோதனை நடைபெறும்போது தமிழ் அதிகாரிகளை அவர்கள் நாடுவதில்லை.

தகுதியான நடுவர்கள் இல்லாதபடியால் எதிர்பார்த்தபடி பல நல்ல கலைஞர்கள் நீக்கப்பட்டும், சிலர் எதுவித உயர்ச்சியுமின்றியும், சிலர் சகல சித்திகளையும் பெற்றும் உள்ளனர்.

முககிய சம்பவம் முடிவுகள் ஒரே நேரத்தில் எல்லோருக்கும் இல்லை. சிலருக்கு இன்னமும் கிடைக்கவில்லை சிலருக்கு மட்டும் இசைக் கச்சேரி ஒலிப்பதிவுகளையும் கேட்டு முடிவு செய்கிருர்கள் எனவும் தெரிகிறது.

தரப்படுத்தல் மறுபரிசோதனை ஒருபுறம் இருக்க, புதிய கலைஞர்களுக்கான பரிசோதனையிலும் சில தவறுகள். வீணைக் கலைஞர்களைப் பரிசீலிக்கும் நடுவர்களில் கர்நாடக இசை தெரியாத முஸ்லீம் அதிகாரியொருவர்உள்ளார். அவர் ஹிந்துஸ்தானி இசை படித்ததாக கேள்வி தொழில் ரீதியில் 'இதுவரை மேடைப்பக்கமே சென்றிருக்கமாட்டார். ஹிந்துஸ்தானி இசை படித்தவர் எப்படிக் கர்நாடக இசைக் கலைஞர்களைப் பரிசீலிக்கலாம். எமது ராக நுணுக்கங்கள் ஸ்வரசஞ்சாரங்கள், விவாதி ராகங்கள் இவர்களுக்குப் புரியுமா?

எமது நாட்டில் எத்தனையோ கர்நாடக இசை மேதைகளும், தொழில்முறையில்லாத கர்நாடக இசைத் தராதரப்பத்திரங்களை உடைய அநேக விற்பன்னர்களும் இருக்கும்போது தற்போதைய வானெலி இசைப் பரிசோதனை தகுந்த நடுவர்களின்றி நடத்தப்பட்டதால் தொடர்ந்தும் வானெலி வருடத்திற்கொரு தடவை மறுபரிசோதனைகளை நடாத்தும் என்பது நிச்சயம்.

நிகழ்ச்சிகளைத் தவிர மறுபரிசோதனைகள்தான் நமது வானெலியின் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

'ரஸிகப்பிரியா'

## விசேட கூட்டம் நடத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தையிட்டி கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டமொன்றை விரைவில் கூட்டும்படி மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் சுமார் 10 பேர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைக் கடிதமூலம் கேட்டிருக்கின்றனர்.

மேற்படி சங்கத்தின் நிர்வாகம் தொடர்பாக புகார்கள் எழுந்துள்ளதாகவும் இதுபற்றி ஆராய விசேட பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தும்படி சங்கத்தலைவர் உதவி அரசாங்க அதிபர், - யாழ். அரசாங்க அதிபர் ஆகியோரைக் கடந்த 2ம்திகதி 17ம்திகதி கடிதம் மூலம் கேட்டிருந்ததாகவும் ஆனல் இதுவரை இதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் மீண்டும் இக்கோரிக்கையை அரசாங்க அதிபருக்கு அவர்கள் விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தர்மபுரத்தில்

## ஆயுதக் கோஷ்டி தாக்குதல்

(கிளிநொச்சி)
முள்ளைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த லொறி ஒன்று தர்மபுரத்தில் ஆயுதம் தாங்கிய கோஷ்டியினுல் தாக்கப்பட்டதால் சாரதி காயமடைந்ததுடன், லொறியும் சேதமடைந்தது. காயமடைந்த சாரதி சி சபாரத்தினம், அக்கோஷ்டியிடமிருந்து தப்பி தந்து பொலிசில் புகார் செய்வார்.

கிளிநொச்சி பொலிஸ் சார்ஜன்ட் சண்முகராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகிறது. [க

உங்கள் வீட்டிற்குத் தேவையான
பாவனைப்பொருட்களை
தவணைமுறையில்
சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- தொலைக்காட்சி (T.V.) பெட்டிகள்
- மின் விசிறிகள்
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- துவிச்சக்கர வண்டிகள்

மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்கள்!

மங்கள வைபவங்கள் வீடியோ படப்பிடிப்புச் செய்துகொடுக்கப்படும்

தொடர்புகொள்ளவும்:
முகாமையாளர்
TFC த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்;
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7680

உங்கள் மேலதிக பணத்திற்கு
கூடுதலான வட்டியைப் பெற்றுக்கொள்ள
யாழ்ப்பாணத்தில்
H P. T. ஸ்தாபனத்தை
நாடுங்கள்
மாதாந்தம் 24% தொடக்கம் 27% வரையும்
முதிர்ச்சியில் 26% தொடக்கம்
33 1/3% வரையும் கொடுக்கப்படும்-
H. P. T. (யாழ்ப்பாணம்)
3, மக்கள் சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

## இயந்திரம் இணைக்கும் வேலை,

# ஜேர்மன் நிபுணர்கள் நேரடி மேற்பார்வை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட வேலைப் பிரிவில் இயந்திரசாதனங்கள் இணைக்கும் வேலைகள் ஜெர்மன் நிபுணர்களது நேரடி கண்காணிப்பில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலையின் 3வது கட்ட அபிவிருத்திவேலைகள் மிகவும் துரிதகதியில் இடம்பெற்று வந்தன. அண்மையில் இங்கு விஜயம்செய்த கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்யூ வேலைகளை நேரில் பார்வையிட்டதுடன் ஜூலைமாதத்திற்கிடையில் வேலைகளை பூர்த்திசெய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தார்.

இதன்படி மேற்படி 3ம் கட்ட வேலைப் பிரிவில் வேலைகள் மிகவும் துரிதகதியில் இடம்பெற்றுவந்தன. கட்டிட அமைப்புவேலைகள் பூர்த்தியடைந்துள்ளதையடுத்து இயந்திரசாதனங்களை இணைக்கும்வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஜெர்மன் நிபுணர் ஒருவர் இங்கு தங்கியிருந்து வேலைகளை கண்காணித்துவந்தார். தற்போது இயந்திரசாதனங்கள் இணைக்கப்படுவதை நேரில் கண்காணிக்க மேலும் சில ஜெர்மன் நிபுணர்கள் வந்துள்ளனர்.

இயந்திரசாதனங்களை உயரத்திற்கு எடுத்துச்சென்று இணைப்பதற்கு உபயோகிக்கப்பட்டுவந்த இராட்சத பாரந்தூக்கி அண்மையில் உதிரிப்பாகம் ஒன்றை மேலே உயர்த்தும் போது வளைந்துசேதமடைந்ததால் அதனை திருத்தும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24 மணி நேரமும் வேலைகள் மிகவும் துரிதகதியில் இடம்பெறுகின்றன.

திட்டமிட்டபடி ஜூலையில் வேலைகள் பூர்த்தியாகி ஆகஸ்டில் இந்த 3ம் கட்ட வேலைத்தளம் திறந்துவைக்கப்படலாம் என மதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று

(சுழிபுரம்)

பண்ணாகம் விசவத்தனை முருகன் கும்பாபிஷேக பன்னிரண்டாம் நாளான இன்று இரவு ''முருகன் பிள்ளைத் தமிழ்'' பொருள்பற்றி ஓதுவார் மு கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் விரிவுரை நிகழ்த்துவார். (க)

## 200 ரூபா அபராதம்

[சாவகச்சேரி]

கொடிகாமத்தைச் சேர்ந்த வர்தகர்ஒருவர் 1-70 சதம் விற்கவேண்டிய80 பக்ககொப்பி ஒன்றை 2-(0 ரூபாவாக விற்றதாக குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் யாழ். விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரால் இழ் வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடந்த இவ்வழக்கில் எதிரி இதற்குமுன் குட்றஞ்செய்யவில்லைஎன்பதை அறிந்த நீதிபதி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் நிமித்தம் ரூபா 200 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார். [க]

## போக்லண்டில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அனுப்பிவைத்த 36 போர்க் கப்பல்களில் 5 அதிநவீன போர்க்கப்பல்கள் ஆர்ஜென் படைகளால் அழிக்கப்பட்டதுடன், அவற்றிலிருந்த வீரர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ்தரப்பில் பெருமளவு உயிர்ச்சேதங்கள் தரையிறங்கும் வேளைகளிலேயே ஏற்பட்டுவந்ததென்றும் தற்போது இறுதியாக நடைபெற்ற சண்டையிலும் சிறிதளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பாதுகாப்பமைச்சர் திரு. ஜோன்நொட்டும் ஆர்ஜென்டீனர்கள் சரணடைந்துவிட்டதை நேற்றைய தினம் அறிவித்தார். அவர் மேலும் போக்லண்டிலுள்ள பிரிட்டிஷ் படைகளின் கமாண்டர்வோல்டேர்ஸும் ஆர்ஜென்டீனப் படைகளின் கமாண்டர்மாரியோமெண்டிஸும் தத்தமதுபடைகளின் நிலைகுறித்து உரையாடுவதாகத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பாதுகாப்பமைச்சு போக்லண்டிலுள்ள தமது படைகளுக்கு விடுத்துள்ள உத்தரவொன்றில் ஆர்ஜென்டீனப் படைகள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்வதை நிறுத்தக் கூறியிருப்பதுடன் அவை தாக்கமுனைந்தால் மட்டுமே பதிலடிகொடுக்கும்படியும் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. [கி]

## மீசாலை திருட்டு வழக்கு:

# சாட்சிகளை எதிரிகளே குறுக்குவிசாரணை செய்தனர்!

(சாவகச்சேரி)

''இந்த நகைகள் என்னுடைய மனைவியினுடையது. 22 வருடகாலமாக நான் பாவித்தேன் என்றவகையில், இப்படியான நகைகள் இதே அளவான இதே நிறையான நகைகள் வேறு இடங்களிலும் வாங்கலாம் என்றாலும் இவை எனது மனைவியுனுடையவை என்பதை திடமாகக் கூறுகின்றேன்''

மீசாலை, நகைத்திருட்டு வழக்கொன்றில் சாட்சியமளிக்கும்போது மீசாலை வடக்கு வீரசிங்கம் மகாவித்தியாலய துணைஅதிபர் கே. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வழக்கில் 80 ஜனவரி 12ல் சாவகச்சேரியைச் சேர்ந்த நிசாம் என்பவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமீம் என்பவரும் மீசாலை தெற்கைச் சேர்ந்த ஆசிரியர் கந்தையா நடராசா என்பவரது வீட்டில் பட்டப்பகலில் அவரது வீட்டின் கப்பியை வளைத்து உட்புகுந்து 17,450 ரூபா பெறுமதியான தங்கநகைகள் உட்படப் பல பொருட்களைக் களவாடியதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

சட்டத்தரணிகளின்றி எதிரிகளே சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தனர். களவு போன பொருட்களின் விபரம், தங்கநகைகளின் நிறை, பெறுமதி என்பவற்றைப் பற்றியும் இந்த நகைபோல வேறு இடங்களிலும் வாங்கலாம்தானே என எதிரி கேட்கும்போது கோட்டிலே சொற்பொழிவு நடத்தவேண்டாமென 2ம் எதிரியை நீதிபதி எச்சரித்தார்.

நகைப்பெட்டியில் ஆசிரியர் நடராசாவின் பெயர் எழுதப்பட்டிருந்தது எனத் தெரிவித்த எதிரி இப் பெயரைப் பொலிஸ்நிலையத்தில் வைத்துப் பின்னரும் எழுதியிருக்கலாம் தானே என சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்கையில் கேட்டனர்.

இவற்றை முற்றாக மறுத்த சாட்சியைக் களவுபோன பொழுது சந்தேகத்தின் பேரில் யாராவது பெயர்களைக் கொடுக்கவில்லையேஎன எதிரிகள் கேட்டபோது சாட்சி ஒப்புக்கொண்டார்.

நீதிபதி வழக்கை இந்த மாதம் 29ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [க]

## பாலாவி கொலை வழக்கு:

# காயங்கள் கொட்டனால் ஏற்பட்டிருக்கலாம்

## வைத்திய அதிகாரி சாட்சியம்

(சாவகச்சேரி)

யாழ். வைத்தியசாலையில் காலமான சின்னவி சின்னராசா என்பவரின் பிரேத பரிசோதனையை நடத்தினேன். காலமானவரின்மகள் யசோதா அடையாளங் காட்டினார். அவரது தலையில் ஒரு கிளிசல் காயம் இருந்துது.

கொடிகாமம் பாலாவி, கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் யாழ். வைத்திய அதிகாரி திருமதி நித்தியானந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 82ஏப்பிரல்28ல் பாலாவியைச் சேர்ந்த சின்னவி சின்னராசா என்பவரை அவ்வூரைச் சேர்ந்த வல்லி கணபதிப்பிள்ளை, சண்முகநாதன் என்பவர்கள் பொல்லால்அடித்துக் கொலை செய்ததாகச சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. ஜெயசிங்கம் சட்டத்தரணி சீ. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆஜராகினர்.

யாழ். வைத்திய அதிகாரி திருமதி நித்தியானந்தன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்: அவரது இடதுபக்கமுழங்கையின் கீழ் உரோசறகாயமும் ஒன்று இருந்தது. பழையகாயமொன்று இடதுகையின் ஆட்காட்டி விரலின் உட்புறத்தில் இருந்தது. காயங்களுக்கு 3 தையல் போடப்பட்டது. தோளுக்கு கீழாக வலதுபக்கத்தில் இரத்தம் உறைந்திருந்தது.

காணப்பட்ட காயங்கள் கொட்டனால் ஏற்பட்டதாயிருக்கலாம். வெளிக்காயமொன்று சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முந்தியதாகவிருக்கலாம். இவரது மரணம் வெளிக்காய உட்காயத் தொடர்பினால் ஏற்பட்டிருக்கலாம்.

1ம்எதிரியின்சட்டத்தரணி ஜெயசிங்கத்தின் குறுக்கு விசாரணையில் வெளிக்காயமொன்று 2 நாளைக்கு முன் எப்போ நடந்ததென்பதை திட்டவட்டமாகக் கூறமுடியாதெனவும், சம்பவம் நடந்த சொற்ப நேரத்தில் சத்திர சிகிச்சை செய்திருந்தால் இறந்தவர் தப்பியுமிருக்கலாமெனவும், சாதாரணமாக இப்படியான காயங்கள் ஏற்பட்டவர்கள் தப்புவதுமுண்டு. எனவும், இறந்தவர் கூடுதலான மதுபோதையிலிருந்திருந்தால் நடந்த விடயத்தைவைத்தியருக்குக் கூறமுடியாதவராயிருப்பார் எனவும் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி வைத்தியதிகாரி கே.சண்முகநாதன் தனதுசாட்சியத்தில் கூறியதாவது: சம்பவதினம் 3.15 வரையில் சின்னவி சின்னராரா என்பவரைப் பரிசோதித்தேன். அவர்அறிவு மயங்கிய நிலையில் காணப்பட்டார். மதுபான வாடைவீசியது முன்னர் குறிப்பிட்ட காயங்கள் உடலிற் காணப்பட்டன. அவரது நிலை மோசமானதாக இருந்ததால் அவரை யாழ். வைத்தியசாலைக்கு மாற்றினேன்.

2ம் எதிரி வல்லி சண்முகநாதன் என்பவரையும் பரிசோதனை செய்தேன் அவரது சிரசின் வலப்பக்கத்தில் 1 அங்குல நீள தோல் தாழ்ப்பமுள்ள சிளிசல் காயம் காணப்பட்டது. சின்னராசா விக்கினேஸ்வரன் என்பவரையும் பரிசோதித்தேன். அவருக்குப் வலது பக்கத்தில் இரண்டரைஅங்குல நீளமும் தோல் தாழ்ப்பமுமுள்ள கிளிசல் காயமும் காணப்பட்டது என்றார்.

1ம்எதிரி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கே ஜெயசிங்கம் குறுக்கு விசாரணை செய்கையில்; இறந்தவர் வைத்தியசாலையில் அனுமதித்த பொழுது மதுபோதையில் இருந்ததாகவும் தான் மதுபோதைக்கேற்ற சிகிச்சை செய்தபோது மயக்கம் தெளியாதபடியாலும் அவரது நிலைமை மோசமாக இருந்ததாலும் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பியதாகவும் தான் யாழ் வைத்தியசாலைக்குஅனுப்பும்வரை மயக்க நிலையிலிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

2ம் எதிரியின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணனும் குறுக்கு விசாரணை செய்தபின் நீதிபதி இந்த மாசம் 21ம் திகதி வரை எதிரிகளை விளக்கமறியலில் வைத்து வழக்கை ஒத்திவைத்தார். (க)


ஒரு முறை தவணைப் பணத்தை செலுத்துங்கள், தங்க ஆபரணங்கள் உங்கள் உடமையாகும்! இன்று முதல் மாதாந்தத் தவணைத் திட்டத்தில்

**தங்கம் வாங்குங்கள்**

உங்களுக்குத் தேவையான எல்லாப் பவுண் நகைகளையும் நியாயமான விலையில் வாங்கி மாதாந்தத் தவணை முறையில் பணத்தைச் செலுத்துங்கள்.

உங்கள் நம்பிக்கையான நகை வியாபாரிகளிடம் தேவையான ஆபரணங்களைத் தெரிவு செய்யுங்கள்.

ஒரு ஆரம்ப தவணைப் பணத்துடன் அந்தத் தங்க நகைகளை உங்களுடையதாக்க நாம் உதவி செய்வோம்.

கவர்ச்சிகரமான தவணைத்திட்டத்தின் விபரங்களை அறிய எம்மைக் காணுங்கள்.

TFC

**தபினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

வெஸ்லி மானிப்பாய்
17-6-82 வரை
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் -ஜெய்சித்ரா
வண்டிக்காரன் மகன்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - பாரதி
உனக்கும் எனக்கும்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

## ஆங்கில தினப் போட்டி

உடுப்பிட்டி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கு இடையேயான வருடாந்த ஆங்கில தினப்போட்டி இம்மாதம் 23 ம் திகதி கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் 39 பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன. (க)

ராணி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
Force 10 From Navarone

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
4-வது வெற்றி வாரம்
கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
சுவப்ணு, தேங்காய்,
தங்கவேலு, நாகேஷ்.



கடல் மீன்கள்
—கலர்—

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
ரஜனிகாந் ✶ சுஜாதா ✶ விஜயன் ✶ கராத்தே மணி ✶ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
5-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
✶ கார்த்திக் ✶ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—ஜெயசித்திரா நடித்த
இன்ஸ்பெக்டர் மனைவி
Coming soon! BRUCE LEE in
THE GAME OF DEATH

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00, 9-30
The Other Side of Midnight
கொழும்பில் 100 நாட்களுக்குமேல் ஓடி ஆங்கிலப்படத்தில் கூடிய வசூலைக்கொடுத்த அதி உன்னத சித்திரம்

16th & 17th
றீகல் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
இதயக்கனி
(புதிய பிரதி)
18-6-82 முதல் ஸ்ரீதரின்:
மோகனப் புன்னகை

# "பல மதங்களையும் சேர்ந்த பிள்ளைகள் ஒன்றாக கல்விபயில வேண்டும்"

(அரியாலை)

''பல மதங்களையும் சேர்ந்த பிள்ளைகள் ஒன்றாக இப்பாடசாலையில் கல்விகற்று வருவது மகிழ்ச்சிக்குரியது இதனையே நாம் விரும்புகின்றோம். மாணவர் மாணவிகளின் கல்லூரி வாழ்க்கை மிகவும் சிறந்ததாக அமைகிறது. இக் காலத்தில் இவர்களுக்கு முக்கிய பொறுப்புக்கள் இல்லாததினால் இந்தப் பருவத்தை இவர்கள் மிகவும் சந்தோஷமாக கழிக்கக் கூடியதாக இருக்கிறது'' என்று நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாசாலையின் கலைவிழாவில் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கலைவிழாவை யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோனும், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையாவும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

கல்லூரி அதிபரின் வரவேற்புரையைத் தொடர்ந்து மாவட்ட அமைச்சர் பேசுகையில்:

மாணவ மாணவிகள் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும், சாரணர், வழிகாட்டிகள் துறைகளிலும் போதிய திறமைகாட்டக் கூடியதாகப் பயிற்சிபெற வேண்டும். இந்த வித்தியாலயம் கல்வியில் மட்டுமல்ல, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளிலும் மாணவ மாணவிகளை உற்சாகப்படுத்தி அதில் ஈடுபடச் செய்துவருவதை நான்பாராட்டுகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

மாணவ மாணவிகளது கலை, நடன, நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## மதுவுக்கு அடிமையானவர் தற்கொலை

(கிளிநொச்சி)

வாழ்நாள் பூராவும் மதுவுக்கு அடிமையாகிவந்த அறுபது வயது வயோதிபர், மனைவியின் ஏச்சுத் தாங்காது மதுவுடன் கிருமிநாசினி கலந்து அருந்தி வாழ்வை முடித்துக் கொண்டார்.

இவ்வாறு மரணமானவர் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த பஞ்சாட்சரம் ஆறுமுகம் என்பவராவார். மரணம் சம்பந்தமான விசாரணையைக் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை ஆஸ்பத்திரிப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த திரு. எம். கணேசதுரை ஆஜர்செய்தார். காலஞ்சென்றவரின் மனைவி ஆ. பரமேஸ்வரி, மகன் ஆ. சத்திவேல் ஆகியோரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி யோகலிங்கம் தற்கொலையென்று தீர்ப்பளித்தார்.

## நகை, ரொக்கம் கொள்ளை

(மாவிட்டபுரம்)

அச்சுவேலியில் வீடுடைத்துத் திருடப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட சம்பவத்தில் 34 ஆயிரத்து 870 ரூபா பெறுமதியான நகை, பணம் மற்றும் பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தம்பாலையில் ஏ. றொபேட் என்பவரது வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவர்கள் வெளியே செறிருந்த சமயம் பார்த்து வீட்டின் ஓடு பிரிக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றிருந்தது தொடர்பாக மேற்படி வீட்டுக்காரரர் காங்கேசன் துறைப்பொலிசில் புகார் செய்திருந்தாரர்

இது தொடர்பாக மேற்படி வீட்டில் வாடகைக்கு இருந்த எஸ். இரா சநாயகம் என்பவர் பொலிசில் தெரிவித்துள்ளதகவலின் படி மேற்படி வீட்டிலிருந்த இவரது 34 ஆயிரத்து 870 ரூபா பெறுமெதியான நகை, பணம், கசெற்றேடியோ மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

காங்கேசன் துறைப் பொலிசார் இது குறித்து தீவிர விசாரணையில் இறங்சியுள்ளனர்.

## விளையாட்டரங்கை பிரதமர் பார்வையிட்டார்

புதுடில்லி, ஜூன், 15

இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக புதுடில்லியில் நிர்மாணிக்கப் பட்டுவரும் பெரும் விளையாட்டரங்கை இந்தியப்பிரதமர் திருமதி. இந்திராகாந்தியும், அவரது புத்திரரான திரு. ராஜீவ் காந்தியும் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஆசியாவிலேயுள்ள பெரும் விளையாட்டரங்குகளில் இவ்வரங்கு மூன்றாவது இடத்தை வகிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்குமான திடல்கள் நன்கு திட்டதுட்டு அமைக்கப்பட்டுவருவதுடன், விளையாட்டு வீரர்களும், உத்தியோகஸ்தர்களும், பார்வையாளர்களும் தங்குவதற்கென நவீன வசதிகளையுடைய தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டரங்கில் நிர்மான வேலைகள் இன்னும் மூன்றுமாதகாலத்தில் முடிவடைந்துவிடுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இங்கு அமைக்கப்படும் நீச்சல் தடாகமொன்று இந்தியாவிலேயே மிகப்பெரியதாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## இன்றைய பலன்

ஆனி மாதம் 2-ம் திகதி

புதன்கிழமை

(16—6—82)

மேடம்: சொற்சிலம்பு ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சொக்க வைப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பெரியவர்களுடன் உறவுகள் பலப்படும்.

இடபம்: நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும். நெடும் பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மிதுனம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். மோகன வாழ்வு கிட்டும். முன்னேற்றவாழ்வும் உண்டு. நல்லதினம்.

கடகம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் உண்டு. பொன்னான தினம்.

சிங்கம்: இடர்பல தாக்கும். இதயத்தில் எரிமலை எழுறும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துகொள்ள நேரிடும். துக்க தினம்.

கன்னி: குளுமையான சம்பவங்கள் இடம் பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். குடும்பத்தில் சிறப்பும் ஏற்படலாம். நல்ல தினமாகும்.

துலாம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும். துக்க தினம்.

விருச்சிகம்: இதயத்துக்கு இதம் தரும் செய்தியொன்றும் கிடைக்கலாம். புண்ணிய கருமங்களில் விருப்பம் மேலிடும். ஸ்தல யாத்திரை ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

தனு: கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன் மூலம் புதிய பாதை திறக்கும். வெளியிடத் தொடர்புகளில் நல்லதிருப்பம் ஏற்படும்.

மகரம்: நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். சுற்றாடலின் மதிப்பு உயரும். பெரிய மனிதர்களின் ஆதரவும் பெருகும்.

கும்பம்; எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலேவந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

மீனம்: இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப்படும். வீட்டில் வைத்தியச் செலவு அதிகரிக்கலாம். உணர்ச்சி வசப்படாது இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க வேலுப்பிள்ளை

### பயிற்சி பெறும்

## மருந்து கலவையாளருக்கு சம்பளம்கிடைக்கவில்லையாம்!

[பண்டத்தரிப்பு]

சிற்றூழியர் தரத்திலிருந்து மருந்து கலவையாளர்களாக தெரிவு செய்யப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் பயிற்சிபெற்றுவரும் எட்டுப்பேருக்கும் இதுவரை சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் நிலைமைபற்றி அரசாங்க மருந்து கல்லவயாளர் சங்க யாழ் மாவட்ட கிளையின் செயலாளர் திரு சந்தசாமி யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்து பயிற்சிக் காலத்திற்கான வேதனத்தை வழங்க நடவடிக்கைஎடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

பயிற்சிக் காலத்திற்கு வேதனம் வழங்குவதற்கு சுகாதாரத் திணைக்கள தலைமைப் பீடம் தமக்கு எவ்வித பணிப்புரையையும் இதுவரை வழங்கவில்லை என்று சுகாதாரசேவை அத்தியட்சகர் தெரிவித்ததை அடுத்து கொழும்பிலுள்ள தாய்ச் சங்கத்திற்கு ஊடாக சுகாதார சேவை இயக்குனருக்கு இவர்களின் வேதனம் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### அரிசி நிறுவை மோசடி வழக்கு:

# பாசமலர் வாங்கிய அரிசியில் 7 அவுன்ஸ் குறைவாகஇருந்தது

## நிறுவை அளவை பரிசோதகர் சாட்சியம்

(சாவகச்சேரி)

''சம்பவதினம் நான் கொடிகாமம் பல நோக்குச் சங்கக் கிளை ஒன்றிற்குத் திடீர் விஜயம் செய்தேன். பலர் தமது பொருட்களை வாங்குவதற்கு, கியூவரிசையில் நின்றார்கள். பாசமலர் என்பவர் வாங்கிய பொருட்களை உடனே பரிசோதித்துப்பார்த்தேன். அவர் வாங்கிய அரிசியில் 7 அவுன்ஸ் குறைவாக இருக்கக் கண்டேன்''

அரிசி நிறுவை மோசடி வழக்கில் யாழ். நிறுவை அளவைப் பரிசோதகர் திரு. க.கா. சோதிலிங்கம் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வருடம் 80 ஏப்ரல் 5-ல் கொடிகாமம் கிளை -1-ம் இலக்கத்தைச் சேர்ந்த விற்பனவுக்காரர் சந்திரசேகரம் என்பவர் பாசமலர் என்பவரது கூப்பன் முத்திரைப் பொருட்களில் மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டி யாழ். திடீர் பரிசோதனைக் குழுவால் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் முறைப்பாட்டுக்காரர்சார்பில் நிறுவை அளவைப் பொறுப்பதிகாரி அன்ரன் பிலிப்பும் ஆஜராகினர்.

தொடர்ந்து சோதிலிங்கம் சாட்சியமளிக்கும்போது பாசமலரின் அரிசியைப் பரிசோதனை செய்தபோது என்னை யார் என்று எனது அறிமுக அட்டையைக் காட்டிக்கொண்டேன்.

குறைவான அரிசியைக் கொடுக்கும்படி கேட்டதும் அவர்கள் கொடுத்தார்கள். அப்பொழுது பாசமலருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சாமான் சிட்டையையும் காண்பித்தார்.

எதிரி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாய சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:-

குறைவான 7 அவுன்ஸ் அரிசியையோ அதை நிறுத்த தராசுபடி என்பவற்றையோ கோட்டிற்குச் சான்றுப்பொருளாக ஒப்படைக்கவில்லை சாட்டிய றிசீற் ஒருமூலப்பிரதி 12 ருத்தல் என்பது எழுதப்படவில்லை.

கிளை முகாமையாளர் பாசமலருக்கு பற்றுச்சீட்டைப் போட்டதை தான் நேரேகண்டதாகவும் அதே பற்றச்சீட்டைத்தான் பாசமலரிடமிருந்து பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

கர்சாய்வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாசமலர் சாட்சியமளிக்கும்போது:-

சம்பவதினம் தான் கிளை 1க்கு தான் கூப்பன் சாமான் வாங்கப்போனதாகவும் சாமான் வாங்கிக்கொண்டபடியால் இறங்குபோது யாரோ ஒருவர்வந்து கூப்பன் சாமான்களைத் திரும்பவும் பரிசோதித்துப் பார்த்ததாகவும் அதில் அரிசியில் 7 அவுன்ஸ் குறைவாகக் காணப்பட்டதாகவும் திருப்ப அந்த அரிசி பிடித்தவரின் வேண்டுகோட்படி போட்டுத் தரப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயாவின் குறுக்குவிசாரணையில்போது பாசமலர் சங்கக் கடைக்குள் வைத்து கண்டு பிடிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டார்:

மேல்விசாரணை ஆகஸ்ட் மாசம் 9ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ச)

### எம். பி. உறுதிமொழிமீது

# உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

''ஊரெழு கணேச வித்தியாசாலைக்கென ஊரவர்களால் குறைந்தவிலையில் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டரங்குக்காணியை வித்தியாசாலை அதிபர் அபகரித்ததாகக் கூறி ஊரெழு மக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த உண்ணாவிரதத்தை கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரமும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. நா. இராசேந்திரமும் தலையிட்டு நிறுத்தி வைத்துள்ளதாக ஊரெழு கல்வி, கலாச்சார அபிவிருத்திச் சபைத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''ஊரெழு கணேசவித்தியாசாலைக்கென குறைந்த விலையில் ஊரவர்கள் ஒழுங்குசெய்த விளையாட்டரங்கை வித்தியாசாலை அதிபர் அபகரித்தார் என்று ஊரவர் கடந்த திங்கட்கிழமை ஊரெழுப்பிள்ளையார் கோவிலில் உண்ணாவிரதம் இருந்தனர். இப்பிரச்னையையிட்டு அக்கிராமத்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு கல்வித்திணைக்களம், பொலிஸ் புலனாய்வுத்துறைக்கும் புகார் செய்திருந்தனர். இவ்விவகாரத்தில் ஊரெழு கல்வி கலாச்சார அபிவிருத்திச்சபை முன்னின்று பணியாற்றியது.

''பல சந்தர்ப்பங்களில் இப்பிரச்னையை சுமுகமாக தீர்க்க பொலிஸ்-சமூகங்கள் நல்லுறவுச்சங்கம்; கல்லூரிப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோருக்கு அதிபர் கொடுத்த வாக்குறுதியை பலதடவை மீறவே ஊர்மக்கள் கல்வித்திணைக்களத்தை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். இம்மாதம் 14ம்திகதி வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத காரணத்தால் விரக்தியுற்ற ஊரவர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமறுத்து பெண்கள், பிள்ளைகள் உட்பட அனைவரும் ஆலய முன்பாக உண்ணாவிரதம் இருந்தனர்.

அன்றுமாலை ஆறுமணியளவில் கோப்பாய் எம். பி. திரு மு. ஆலாலசுந்தரமும், மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு நா. இராசேந்திரமும் உண்ணாவிரதம் இருந்தோரை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கேட்டபோது அவர்கள் மூன்றுகோரிக்கைகளை முன்வைத்தனர் மூன்றும் பெற்றுத்தருவதாக உறுதியளிக்கவே பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர்'' (மா)

### முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்

# இந்தியா - இங்கிலாந்து : இங்கிலாந்து வெற்றி

லண்டன், ஜூன். 15

இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்குமிடையே லோட்ஸ்ஸில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்துக் கோஷ்டி 7 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த டெஸ்ட்டில் இந்தியக் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 128 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 39 ஓட்டங்களையும் எடுத்திருந்தது.

இங்கிலாந்துகோஷ்டி முதலாவது இன்னிங்சில் 433 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கட்டுகளுக்கு 67 ஓட்டங்களையும், பெற்று இந்த டெஸ்ட்டில் வெற்றிபெற்றது. (வெ

### இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் பலியான

## அச்சுவேலி நவரத்தினம் மரணம்:

# இன்று தீர்ப்பு

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி வீதியால் சைக்கிளில் சென்ற சமயம் இராணுவத்தினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமான கந்தையா நவரத்தினத்தின் மரணம் தொடர்பான மரண விசாரணையின் தீர்ப்பு இன்று மல்லாகம் நீதிபதியால் வழங்கப்படஇருக்கிறது.

அச்சுவேலி பத்தமேனியில் 20-2-82ல் நடந்த இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிய விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த பல தவணைகளாக இடம்பெற்று வந்தது. சம்பவம் தொடர்பான பல்வேறு சாட்சியங்கள் அளிக்கப்பட்டதையடுத்து தீர்ப்புவழங்குவதற்காகவு, சந்தேகநபர்களான 11 இராணுவ வீரர்கள் சார்பாக சமர்ப்பணங்களைத் தாக்கல் செய்வதற்காகவும் இன்று 16-6-82) வரை விசாரணை ஒத்திப்போடப்பட்டிருந்தது.

இன்று தீர்ப்பு வழங்கப்படுவதுடன் சந்தேகநபர்கள் சார்பில் சமர்ப்பணங்கள் தாக்கல் செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பவ தினம் இரவு 4000 ரூபா பணத்துடன் சைக்கிளில் வீதியால் சென்ற இறந்தவர் ஜீப்பில் வந்த இராணுவத்தினரால் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததும், தமது ஜீப்பை நோக்கிச் சுடப்பட்டதையடுத்து தாம் திருப்பிச் சுட்டபோதே இவர் இறந்ததாக இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டிருந்ததும் அறிந்ததே.

இதுவரை இடம்பெற்ற மரணவிசாரணையில் சம்பவம் பற்றி சாட்சிகள்கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

சாட்சியங்களின் சுருக்கம்

யாழ். சட்டவைத்திய அதிகாரி திரு. என். சரவணபவான்:

''இறந்தவரின் உடலின் முன்பக்கத்தால் சன்னங்கள் எதுவும் உட்செல்லவில்லை. பின்பக்கத்தினாலேயே சன்னங்கள் உட்சென்றிருந்தன. அவரது உடலில் இரண்டு உட்சென்ற காயமும், இரண்டு வெளிச் சென்ற காயமும் இருந்தது. துவக்குச் சூட்டினால் இருதயம், சுவாசப்பை என்பனபாதிக்கப்பட்டு அதிர்ச்சி, இரத்தப்பெருக்குக் காரணமாக மரணம் சம்பவித்தது.

இறந்தவரின் சகோதரர் கந்தையா குணரத்தினம்:-

''இறந்த எனது சகோதரர் திருக்கேதீஸ்வரம் போவதற்காக தமது காரில் சில திருத்த வேலைகளைச்செய்யச்சென்றிருந்தார். மாலை 4 மணிக்குச் சென்றவர் மறுநாள் காலைவரை வீடு திரும்பவில்லை. பின்னர்தான் அவரை இராணுவத்தினர் சுட்டதாக அறிந்தோம். அன்று அவர் மணிக்கூடு, மோதிரம் என்பன அணிந்து சென்றிருந்தார். ஆனால் அவர் இறந்த பின்னர் அதுபற்றி எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

முருகேசு தம்பித்துரை (அச்சுவேலி) :-

''இறந்தவருக்கு எவ்வித வழக்கும் இல்லை. அவர் இறப்பதற்கு முன் பொலிஸோ, இராணுவமோ ஒருபோதும் அவரைத் தேடிவரவில்லை.

கிருஷ்ணபிள்ளை வரதராஜா (அச்சுவேலி) :-

''சம்பவதினம் இறந்தவரிடம் எனது நகைகளை அடைவு மீள்வதற்காக 4000 ரூபா பணம் கொடுத்திருந்தேன். அது அவரிடமே இருந்தது. மோதிரமும், மணிக்கூடும் அவர் அணிந்திருந்தார்.

சின்னப்பு சத்தியேஸ்வரன் (அச்சுவேலி):-

'சம்பவதினம் நான் இறந்தவரைச்சந்தித்தேன். அப்போது வரதராஜா அவரிடம் 4000 ரூபா பணம் கொடுத்ததைக் கண்டேன்.

அரசாங்க இரசாயான பகுப்பாய்வாளர் ஆனந்த டி. மெண்டிஸ்:-

''இறந்தவரின் உடலிலிருந்த துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் எவ்வளவு தூரத்திலிருந்து ஏற்பட்டன என்பதை நிச்சயமாகக்கூறமுடியாதுள்ளது இருந்தபோதும் இறந்தவருக்கும், துப்பாக்கி நுனிக்குமிடையில் சுமார் 6 அடி இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. இராணுவ ஜீப்பிலிருந்த சூடு இறந்தவர் இறந்துகிடந்த இடத்திலிருந்து சுடப்பட்டிருக்க முடியாது.''

முன்னாள் படைவீரர் இம்மானுவேல் ஜோசேப் (அச்சுவேலி:-

''சம்பவதினம் இரவு 10 மணிக்குப்பின் வீதியில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. பின்னர் இராணுவத்தினர் கட்டளையிடுவதுபோல் உத்தரவுகள் கேட்டன. பின்னர் அதிகாலை 4-30 மணியளவில் 3 வெடிச் சத்தங்கள் கேட்டன. பின்னர் காலையிலேயே சம்பவம் பற்றி அறிந்தேன்.''

## கம்பர்மலை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதத்தின் நிபந்தனைகளாகும்.

2-ம் எதிரி தில்லைநடராசா வல்லைவெளித் துப்பாக்கிச்சூட்டின்போது காயமடைந்து இருபெரும் சத்திரசிகிச்சைக்குள்ளானவரென்பதால், அவர் விளக்கமறியலில் இருக்க முடியாது. சொந்த வீட்டில் சிறந்த உபசரணைகளுடன் இருக்க வேண்டும் என்பதே பிணைமனுவில் தமது கோரிக்கை என்று தெரிவித்த எதிரி சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் மேற்படி நிபந்தனைகளை வன்மையாக ஆட்சேபித்தார்.

எதிரியின் உடல்நலத்தையும் அவருக்குத் தேவையான உபசரணைகளையும் வலியுறுத்தி தாம் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருப்பதையும் திரு. லோகேஸ்வரன் சுட்டிக்காட்டவே மேற்படி நிபந்தனைகளை இருவாரங்களில் மறுபரிசிலனை செய்வதாக நீதிபதி தெரிவித்தார். (மா]

## மின்சார விமானக் கப்பல்

மாஸ்கோ, ஜூன். 15

மின்சாரத்தில் இயங்கக் கூடிய விமானக்கப்பலொன்றை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ்விமானக்கப்பல் மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்தில் இயங்கக்கூடியதென்றும் கூறப்பட்டது. [வெ]

## அபிவிருத்திசபை இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை யாழ் செயலகத்திலுள்ள சபாமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் முக்கிய பிரேரணைகள் கொண்டுவரப்படவிருக்கின்றன. (மா)

## ஆட்சியாளரின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டும். தந்தை செல்வாவின் அஹிம்சைப் பாதையை சிவகுமாரன் வெறுத்தபோதிலும் இயக்கத்திற்கோ, தலைமைக்கோ தடையாக என்றும் இருந்ததில்லை. தலைமைக்கு விரோதமாக ஒரு சொல்தானும் பேசாதவன், செயற்படாதவன் தம்பியென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

''தரப்படுத்தலைப் புகுத்த முன்னைய அரசு முயன்றபோது தமிழ் மாணவ சமுதாயம் கிளர்ந்தெழுந்தது. மாணவர் பேரவை மலர்ந்தது அதனை முன்னின்று நடத்திய தம்பி சிவகுமாரன் ஆட்சியாளரின் பிரதிநிதிகளின் வடக்கு வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க தீர்மானித்தனர். (சி)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பணம்)

கொக்குவில் கிழக்கு மாதனைக்கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

இம்மாதம் 27ம்திகதி தேர் உற்சவமும்மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது உற்சவ காலங்களில் திருப்பூங்குடி வி. கே ஆறுமுகம் கந்தபுராண இன்னிசை சொற்பொழிவாற்றுவார்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.